# 'மெட்ரோ ரயில் கட்டண குறைப்பு சாத்தியமில்லை'

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சால் அளித்த பேட்டி:

வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., இடையே, பாதுகாப்பு கமிஷனர், நாளை அதிகாலை விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்திய பின், பாதுகாப்பு சான்றிதழ் கிடைக்கும். அதன் பின், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டை வரை, மெட்ரோ ரயில் இயக்கப்படும்.

மெட்ரோ ரயில் முதல் திட்டத்தில், நீட்டிப்பு திட்டமான வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் வரை, 9.2 கி.மீ., மெட்ரோ ரயில் பாதையில், கட்டுமான பணி நடந்து வருகிறது.

இப்பணி முடிந்து, 2020 ஜூனில், ரயில் போக்குவரத்து துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் கட்டணத்தை குறைக்க சாத்தியமில்லை.

மெட்ரோ நிலையங்களில், நவீன தொழில் நுட்பத்தில், உலகத் தரத்தில் பாதுகாப்பு கருவிகள், சிக்னல்கள், காற்றோட்ட கருவிகள், தீ தடுப்பான்கள் நிறுவப்பட்டுள்ளதால், விடத்து ஏற்படும் முன், எச்சரிக்கை சிக்னல்கள் கிடைக்கும். இதனால், விபத்து ஏற்படாமல் தடுக்க முடியும்; மெட்ரோ ரயில் பயணத்தில், 100 சதவீதம் பாதுகாப்பு உறுதி.

மெட்ரோ ரயில்களில் தற்போது, தினமும், 50 ஆயிரம் முதல், 60 ஆயிரம் பேர் பயணிக்கின்றனர். வண்ணாரப்பேட்டை வரை நீட்டிக்கப்பட்ட பின், கூடுதல் பயணியர் பயணம் செய்வர்.

பயணியரின் வருகைக்கு ஏற்ப, விமான நிலையம் – சென்ட்ரல் இடையே, ரயில்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மெட்ரோ ரயில்களை, அனுபவமில்லாத ஓட்டுனர்கள் இயக்குவதாக கூறப்படுவது, தவறான தகவல்.

மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்திற்கு, வங்கிகள் கடன் தர முன்வந்துள்ளன. மத்திய, மாநில அரசுகளின் நிதியை பெறுவோம்.

முதல் கட்டமாக, மாதவரம் – சி.எம்.பி.டி., – சோழிங்கநல்லூர் வரை, 52 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது. ஆய்வுப் பணி முடிந்ததும், கட்டுமான பணிக்கு, ஜூனில் உலகளாவிய, 'டெண்டர்' கோரப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.